# பயணிகளுக்கான சுங்கத்துறை வழிக்காட்டி

(தமிழ்)




SINGAPORE CUSTOMS

# பயணிகளுக்கான சுங்கத்துறை வழிக்காட்டி

இந்த துண்டு பிரசுரம் சுங்கத்துறை வழக்கங்கள் மற்றும் பரிசோதனை வழிமுறைகளைப் பற்றிய பொதுவான தகவல்களை தரும்.

## ரெட் மற்றும் கிரீன் சேனல்கள்

**ரெட்** மற்றும் **கிரீன் சேனல்** அமைப்பு வந்திறங்கும் பயணிகளின் துரித சரிபார்ப்பிற்காக அனைத்து சோதனை மைய வாயில்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

நீங்கள் கார் வழியாக வந்தால், குடிவரவு சரிபார்ப்பிற்கு பின் வரும் வழியில் **ரெட்** மற்றும் **கிரீன் சேனல்** வழி பலகைகளை பார்ப்பீர்கள். ஆகாய,கடல்,பேருந்து மற்றும் ரயில் வழி பயணிகள் குறிப்பிடப்பட்ட சோதனை சாவடிகளில், **ரெட்** மற்றும் **கிரீன் சேனல்** வழி பலகைகளை வருகை கூடத்திலுள்ள சோதனை மைய வாயில்களின் மேல் பார்க்கலாம். சோதனை மைய வாயில்கள் குடிவரவு மற்றும் சோதனை சாவடி (ICA) அதிகாரிகளால் கவனிக்கப்படுகிறது.

## சுங்கத்துறையில் தெரிவிக்க ஏதுமில்லை




கீழே குறிப்பிடப்பட்ட 3 வகை சரக்குகளில் எதையும் நீங்கள் வைத்திருக்கவில்லை எனில் **கிரீன் சேனலுக்கு** செல்லவும். எனினும் அதிகாரிகள் **கிரீன் சேனலில்** தேர்ந்தெடுத்த சோதனைகளை மேற்கொள்ளக்கூடும். . சந்தேகம் இருக்கும் பட்சத்தில், **ரெட் சேனலில்** இருக்கும் ஐஊயு அதிகாரியிடம் கேட்கவும்.

## தெரிவிக்கப்படவேண்டிய சுங்க சரக்குகள்




நீங்கள் கீழ் உள்ளவற்றை வைத்திருந்தால், **ரெட் சேனலுக்கு செல்லும்:**

- வரி விலக்கு சலுகை அல்லது புளுவு விடுவிப்பு அளவிற்கு அதிகமான வரிவிதிப்பிற்கூரிய வரி செலுத்தப்படவேண்டிய சரக்குகள்
- கட்டுப்படுத்தப்பட்ட அல்லது அனுமதி மறுக்கப்பட்ட பொருட்கள்
- தடைசெய்யப்பட்ட பொருட்கள்

**ரெட் சேனலில்:**

- மேலே குறிப்பிடப்பட்ட 3 வகை சரக்குகளில் எதையேனும் நீங்கள் வைத்திருந்தால் பரிசோதனை அதிகாரிகள் அதிகாரியிடம் தகவல் தெரிவிக்கவும்.
- மேலும், தடை செய்யப்பட்ட / கட்டுபடுத்தப்பட்ட சரக்குகளை அதற்கான இறக்குமதி அனுமதி அல்லது சம்பந்தப்பட்ட சுங்கத் துறையின் அங்கீகார ஆவணத்துடன் கொடுக்கவும்.

## வரிசெலுத்த வேண்டிய சரக்குகள்



சாராயம், ஒயின், பீர், ஏல், ஸ்டௌட் மற்றும் போர்ட்டர்கள் உள்ளிட்ட போதைத்தரும் மதுவகைகள்



சிகரெட்டுகள் (“SDPC” புள்ளிகள் உட்பட), சிகார்கள் உள்ளிட்ட புகையிலை பொருட்கள்




மோட்டார் ஸ்பிரிட்

ஷாண்டி மற்றும் பாட்டிலில் அடைக்கப்பட்ட காக்டைல் பானங்களின் ஆல்கஹால் தன்மை கொள்ளளவின் படி 0.5% ற்கு அதிகமாக இருப்பின் வரிவிதிப்பிற்கு உரியது என்பதை பயணிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறே, ஆரோக்கிய காரணங்களுக்கு மற்றும் சமையலுக்கு பொதுவாக பயன்படுத்தப்படும் டி.ஓ.எம்., யோமெய்சு, சம்சூ மற்றும் அரிசி ஒயின் போன்ற மதுபானங்களின் ஆல்கஹால் தன்மை 0.5% ற்கு அதிகமாக இருப்பின் அவையும் வரிவிதிப்பிற்கு உரியது.

ஷிஷா புகையிலை மற்றும் புகையிலை இல்லாத ஷிஷா ாவும் வரி விதிப்பிற்கு உரியது. ஷிஷா புகையிலையைத் தவிர, புகையிலை இல்லாத ஷிஷாக்களையும் நீர் குழாய் புகைப்பழக்கத்தில் பயன்படுத்தப்படலாம்.

## எச்சரிக்கை:

உங்கள் வரிவிலக்கு சலுகை மற்றும் புளுவு விடுவிப்பு அளவிற்கு அதிகமான பொருட்களுடன் **கிரீன் சேனலில்** செல்வது குற்றமாகும்.

“SDPC” அடையாளப்படுத்தப்பட்ட சிகரெட்டுகள் உள்ளிட்ட புகையிலை பொருட்களுக்கு வரி விலக்கு சலுகை கிடையாது.

தெரியப்படுத்த மறுப்பது குற்றமாகும்.

**$10,000 வரை அபராதம் அல்லது சிறைத்தண்டனை.**

## பொருட் சேவை வரி (ஜிஎஸ்டி) விடுவிப்பு

சிங்கப்பூரில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து சரக்குகளும் பொருட் சேவை வரிக்குரியது (ஜிஎஸ்டி).
வேலை உரிமம், ஊழியர் அட்டை, மாணவர் அட்டை, சாந்தவர் அட்டை அல்லது நீண்ட நாள் அட்டை வைத்திராத
உண்மையான பயணியாக நீங்கள் இருந்தால், இறக்குமதி செய்யப்பட்ட புதிய பொருட்கள், நினைவு பொருட்கள், பரிசு பொருட்கள் ரூ உணவு வகைகள் (தவிர பே தை மது, புகையிலை மற்றும் பெட்ரே லிய பெ ருட்கள்) ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட மதிப்பு வரை ஜிஎஸ்டி விடுவிப்பு அளிக்கப்படும். மதிப்பின் வரையறை பின்வருமாறு:

| சிங்கப்பூரில் அல்லாத காலம் | 18 வயதிற்கு கீழ் | 18 வயது அல்லது அதற்கு மேல் |
|---|---|---|
| 24 மணி நேரத்திற்கும் குறைவாக | விடுவிப்பு கிடையாது | $50 |
| 24 - 48 மணி நேரத்திற்கும் குறைவாக | $50 | $150 |
| 48 மணி நேரம் அல்லது அதற்கு மேல் | $100 | $300 |

மேலே குறிப்பிடப்பட்ட ஜிஎஸ்டி விடுவிப்பு அளவிற்கு மேல் அதிகமாக சரக்குகளை உள்ளே கொண்டுவர ஜிஎஸ்டி செலுத்த வேண்டும். விமான பணிக்குழு உறுப்பினர்களுக்கு , சிங்கப்பூர் அரசால் வழங்கப்பட்ட வேலை உரிமம், ஊழியர் அட்டை, மாணவர் அட்டை, சாந்தவர் அட்டை அல்லது நீண்ட நாள் அட்டை வைத்திருப்பவர்களுக்கும் ஜிஎஸ்டி விடுவிப்பு கிடையாது.

## மதுபான வரிவிலக்கு சலுகை

நீங்கள் ஒரு உண்மையான பயணி மற்றும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால், நீங்கள் மது வாங்க உங்களுக்கு இலவச சலுகை வழங்கப்படும்

a) 18 அல்லது அதற்கு மேல் வயதுடையவராகவும் மற்றுமே;
b) சிங்கப்பூருக்கு வருவதற்கு முன், நீங்கள் 48 மணிநேரம் அல்லது அதற்கு மேல் வெளியே செலவிட்டிருக்க கூடாதவராகவும;
c) நீங்கள் மலேசியாவிலிருந்து வந்திருக்ககூடாதவராகவும; மற்றும்
d) மதுபானங்கள் உங்கள் சொந்த பயன்பாட்டிற்கானதாகவும், சிங்கப்பூரில் இறக்குமதி செய்ய தடை செய்யப்படாததாகவும் இருக்க வேண்டும்.

உங்களுக்கு பின்வரும் விருப்பங்களில் ஒன்றுக்கு மதுபானங்களுக்கான வரிவிலக்கு சலுகை அளிக்கப்படும்:

| விருப்பம் | சாராயம் | ஒயின் | பீர் |
|---|---|---|---|
| A | 1 லிட்டர் | 1 லிட்டர் | 1 லிட்டர் |
| B | – | 2 லிட்டர்கள் | 1 லிட்டர் |
| C | – | 1 லிட்டர் | 2 லிட்டர்கள் |

ஆரோக்கிய காரணங்களுக்கு மற்றும் சமையலுக்கு பொதுவாக பயன்படுத்தப்படும் டி.ஒ.எம்., யோமெய்சு, சம்சூ மற்றும் அரிசி ஒயின் போன்ற மதுவகைகள், ஆல்கஹால் கலந்த ஷாண்டி போன்ற பானங்களுக்கும் விருப்பங்கள் பொருந்தும்.

நீங்கள் உண்மையான விமான பணியாட்கள் குழு உறுப்பினராக இருந்தால், உங்களுக்கு 0.25 லிட்டர் சராயம், மற்றும் 1 லிட்டர் ஒயின் அல்லது 1 லிட்டர் பீர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு வரி விலக்கு சலுகை அளிக்கப்படும்.

**குறிப்பு:** நீங்கள் மலேஷியாவிலிருந்து வந்திருந்தால் உங்களுக்கு மதுபானங்களுக்கான எந்த வரிவிலக்கு சலுகையும் அளிக்கப்படாது.

## முக்கிய குறிப்புகள்

- வரி செலுத்தப்படவேண்டிய சரக்குகள் மற்றும் வரி விலக்கு சலுகை அல்லது ஜிஎஸ்டி விடுவிப்பு அளவிற்கு மேல் அதிகமான சரக்குகள் உங்களிடம் இருந்தால் **ரெட் சேனலுக்கு** செல்லவும். பரிசோதனை அதிகாரிகள் அதிகாரியிடம் தகவல் அளிக்கவும். வரி அல்லது ஜிஎஸ்டி செலுத்தியபின்பு மட்டுமே சரக்குகளை கொண்டுவர இயலும்.
- சொந்த பயன்பாட்டிற்கான சரக்குகளுக்கு மட்டுமே வரி விலக்கு சலுகை அல்லது ஜிஎஸ்டி விடுவிப்பு அளிக்கப்படும். அவற்றை விற்பனை செய்வதோ வெளியில் கொடுப்பதோ குற்றச்செயல்.
- வணிகம், வியாபாரம் அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக, பிறருக்காக எடுத்துச் செல்லப்படும் சரக்குகளுக்கு வரி மற்றும் ஜிஎஸ்டி செலுத்த வேண்டும்.
- போதை தரும் மதுபானங்கள் 10 லிட்டர்களுக்கு அதிகமானதாகவும், புகையிலை பொருட்கள் 400 கிராமுக்கு அதிகமானதாக இருப்பின் சம்பந்தப்பட்ட சுங்கத் துறை அனுமதியின் கீழ் மட்டுமே இறுக்குமதி செய்யப்பட வேண்டும்.
- சம்பந்தப்பட்ட சுங்கத் துறை அனுமதியின் கீழ் மட்டுமே பெட்ரோல் இறுக்குமதி செய்யப்பட வேண்டும். பெட்ரோலின் அளவு 20 லிட்டர்களுக்கும் அதிகமானதாக இருப்பின் சிங்கப்பூர் சிவில் பாதுகாப்பு இயக்கத்திலிருந்து பெறப்படும், இறக்குமதி உரிமம் அவசியம்.
- வரிவிதிப்பிற்கு அல்லாத, கட்டுப்படுத்தப்படாத, கூ300 களுக்கு மேல் மதிப்புள்ள கையில் கொண்டு செல்லப்படும் வியாபார பொருட்கள், சம்பந்தப்பட்ட சுங்கத் துறை அனுமதியின் கீழ் மட்டுமே இறக்குமதி செய்யப்பட வேண்டும்..

**குறிப்பு:** வரி மற்றும் ஜிஎஸ்டி கடன் கார்ட், நெட்ஸ், பண அட்டை அல்லது ஆட்டோபாஸ் கார்ட் வழியாக செலுத்தவும். இது எளிதானது, துரிதமானது மற்றும் வசதியானது.

# சுற்றுள்ள பயணிகளுக்கான திரும்ப பெறும் வசதி

சிங்கப்பூருக்கு வந்த பார்வையாளராக, சுற்றுள்ள பயணிகளுக்கான திரும்ப பெறும் வசதியில் பங்குபெறும் விற்பனையாளரிடமிருந்து வாங்கிய பொருட்களுக்குகான ஜிஎஸ்டியை சுற்றுள்ள பயணிகளுக்கான திரும்ப பெறும் வசதியின் கீழ் திரும்ப பெறலாம். அதற்கு நீங்கள் கீழ்காணும் தகுதிகள் உடையவராக இருத்தல் வேண்டும்:

- வாங்கும் சமயத்தில் குறைந்தது 16 வயதுள்ளவராக இருக்க வேண்டும்
- நீங்கள் சிங்கப்பூர் குடிமகனாக அல்லது நிரந்தர வாசியாக இருக்க கூடாது
- வாங்குவதற்கு முந்தைய கடைசி 24 மாதங்களில் 365 நாட்களுக்கு அதிகமான நாட்களை சிங்கப்பூரில் செலவிட்டிருக்க கூடாது
- வாங்குவதற்கு முந்தைய கடைசி 6 மாத காலத்தில் நீங்கள் சிங்கப்பூரில் ஒருபோதும் பணிபுரிந்திருக்க கூடாது
- நீங்கள் சிங்கப்பூரிலிருந்து செல்லும் விமானத்தின் விமான பணியாளர் குழு உறுப்பினராக இருக்க கூடாது
- சரக்குகளை வாங்கிய நாளிலிருந்து 2 மாதங்களுக்குள் சாங்கி சர்வதேச விமான நிலையம் அல்லது சிலேடர் சர்வதேச விமான நிலையம் வழியாக சிங்கப்பூரிலிருந்து எடுத்துச் செல்ல வேண்டும் மேலும்
- பங்குபெறும் சில்லரை விற்பனை கடையில் ஒரே நாளில் குறைந்தது கூ100 செலவிட்டிருக்க வேண்டும். இந்த குறைந்த அளவை நிறைவு செய்ய அதே தேதியடப்பட்ட 3 ரசீதுகள் வரை சேர்த்து வைத்துக்கொள்ளலாம்.

சிங்கப்பூருக்கு வந்திருக்கும் மாணவர் அட்டை வைத்திருக்கும் பார்வையாளராக நீங்கள் இருப்பின், சுற்றுள்ள பயணிகளுக்கான திரும்ப பெறும் வசதியின் கீழ் ஜிஎஸ்டியை திரும்ப கோரலாம்.இருப்பினும் நீங்கள் மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருப்பதோடு இங்கு கொடுக்கப்பட்டுள்ள இதர நிபந்தனைகளைக்கும் உட்பட்டு இருந்தால் மட்டுமே இயலும்:

- உங்கள் மாணவர் அட்டை காலவதியாவதற்கு முந்தைய கடைசி 4 மாதங்களில் நீங்கள் சரக்குகளை வாங்கியிருக்க வேண்டும்அதோடு
- சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு சிங்கப்பூருக்கு வெளி-யே குறைந்தது 12 மாத காலம்வரை தங்கியிருக்க கருதியிருக்க வேண்டும்.

## எவ்வாறு ஜிஎஸ்டியை திரும்ப கோருவது

விற்பனையாளரால் கொடுக்கப்பட்ட மின்னனு சுற்றுள்ள பயணிகளுக்கான திரும்ப பெறும் வசதி (நவுசுளு) டிக்கெட்டுகள் உங்களிடம் இருந்தால், ஜிஎஸ்டி திரும்ப பெறுவதற்கு விண்ணப்பிக்க நவுசுளு சுய உதவி சாவடிக்கு செல்லவும். சரக்குகளை ஆய்வு செய்ய தேவைப்பட்டால், கீழ்காணும் பொருட்களை சுங்க ஆய்வு கவுன்ட்டரில் நீங்கள் நேரடியாக சென்று பார்வைக்கு அளிக்க வேண்டும் :

1) வாங்கிய பொருட்கள்
2) விலை, சரக்கின் விவரம், வரிசை எண் ( இருக்குமெனில்) ஆகியவற்றை தெளிவாக காட்டும் விற்பனையாளரின் உண்மையான ரசீது.`. விலைப் பட்டியல்˙ மற்றும்
3) பாஸ்போர்ட் மற்றும் போர்டிங் பாஸ் அல்லது உறுதி செய்யப்பட்ட விமான பயணச்சீட்டு.

**குறிப்பு:** இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள தகுதிகள் அல்லாத திரும்ப பெறுதல் விண்ணப்பங்களை சிங்கப்பூர் சுங்கத் துறை மேலொப்பமிடாது.

## சுங்கத்துறையின் மேலொப்பக்கதை எங்கு பெறுவது

சுங்கத் துறை ஆய்வு கவுன்ட்டர்கள் கீழ்காணும் இடங்களில் உள்ளன:

- **செக்-இன்** செய்ய வேண்டிய சரக்குகள் சாங்கி விமான நிலைய டெர்மினல் 1, 2, 3 மற்றும் பட்ஜெட் டெர்மினல் புறப்பாடு அறை
- **கையில் எடுத்து செல்லப்படும்** சரக்குகள் சாங்கி விமான நிலைய டெர்மினல் 1, 2, 3 மற்றும் பட்ஜெட் டெர்மினல் இடை வழி ஓய்விட அறை
- செலட்டர் விமான நிலைய ஜஊயு வரி அலுவலகம்.

குறிப்பு:

1. உங்களின் சரக்குகளை ஆராய்ந்து உங்களின் கோரிக்களை சரிபார்க்க சிங்கப்பூர் சுங்கத் துறைக்கு போதிய நேரம் அளிக்கும் விதத்தில் விமான நிலையத்திற்கு நீங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வருவதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

2. திரவ, எரோசால் மற்றும் ஜெல் போன்ற பொருட்களுக்கு அல்லது செக்-இன் சரக்குகளுக்கு ஜிஎஸ்டி திரும்ப கோரினால், மேலொப்பமிடுவதற்காக புறப்பாடு அறையிலிருக்கும் சுங்கத் துறை ஆய்வு கவுன்ட்டருக்கு (குடிவரவு சரிபார்ப்பிற்கு முன்) செல்லவும்.

3. விலையுயர்ந்த சரக்குகள் மற்றும் கையில் எடுத்து செல்லப்படும் சரக்குகளுக்கு ஜிஎஸ்டி திரும்ப கோரி-னால் , ஆமோதிக்கபடுவதற்காக இடை வழி ஓய்விட அறைலிருக்கும் சுங்கத் துறை ஆய்வு கவுன்ட்டருக்கு செல்லவும்.

## முக்கிய குறிப்புகள்

- **பங்குபெறும் விற்பனையாளர்களால் அல்லது அவரின் முகவரால் செய்யப்படும் நவுசுளு டிக்கெட் வழங்கலையோ திரும்ப பெ-றுதல் பணத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலையோ சிங்கப்பூர் சுங்கத் துறை செய்யாது.**
- மேலும்,

(a) முழுவதுமாக அல்லது பகுதியாக சிங்கப்பூரில் உபோயிகித்த பொருட்கள்

(b) வணிகத்திற்காக அல்லது வியாபாரத்திற்காக ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள்

(c) சரக்கு போக்குவரத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட போகிற பொருட்கள்

(d) உணவு விடுதி, தங்கும் விடுதி, தங்கிய வீடு அல்லது அது போன்ற உறைவிடத்திற்க் மற்றும்

(e) சோதனைக்கு அளிக்கப்படாத பொருட்கள். போன்றவற்றிற்கு திரும்ப பெறுதல் அனுமதிக்கப்படாது.

கிழே கொடுக்கபட்டுள்ள செயல்கள் தண்டனைத்தொகை மற்றும் சிறைதண்டனைக்குரிய கடுமையான குற்றச்செயல்கள் ஆகும்:

- சிங்கப்பூர் சுங்கத்துறையிடம் திரும்ப பெறும் விண்ணப்பத்தில் தவறான அறிவிப்பை மேற்கொள்வது மேலும்
- சிங்கப்பூர் சுங்கத் துறையால் திரும்ப பெறும் விண்ணப்பம் ஆமோதிக்கப்பட்ட பின்னர் சரக்குகளை புறப்பாடு அறைக்கு வெளியில் எடுத்து செல்வது அல்லது பிறரிடம் கொடுப்பது.

சுற்றுலா பயணிகளுக்கான திரும்ப பெறுதல் வசதி பற்றி மேலும் தகவல் அறிய , சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்தை (+65) 6356 8633 என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும் அல்லது gst@iras.gov.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும், விற்பனையாளர்கள் அல்லது அவர்களின் முகவர்கள்,

1) குலோபல் புளூ சிங்கப்பூர் பி லிட் (http://www.global-blue.com) அல்லது

2) பிரிமியர் டாகஸ் ஃபிரி சிங்கப்பூர் பி லிட் (http://www.premiertaxfree.com).

# சுங்க வரி செலுத்தும் சாவடிகள்




உங்களின் வரிவிதிப்பிற்குரிய அல்லது வரி செலுத்தட வேண்டிய பொருட்கள் பற்றிய சுய விவரத்தை சாவடி வழியாக செய்வதையும், சுங்க வரி அலுவலகத்திற்கு செல்லாமலேயே தேவையான வரி மற்றும் ஜிஎஸ்டியை மின்னனு முறையில் செலுத்தும் வசதியையும் சுங்க வரி செலுத்தும் சாவடி அளிக்கிறது.

சுய விவரிப்பு சேவை மற்றும் பணம் செலுத்துவதற்கான மின்னனு இயந்திர முறைய பயனாளர்-ஏதுவானது, பாதுகாப்பானது. மேலும், பயன்படுத்த எளிதானது, இலகுவானது. நீங்கள் வாங்கியவற்றை பற்றிய விவரங்களை பதிவு செய்தால் மட்டும் போதும், ஜிஎஸ்டி விடுவிப்பின் குறைப்பு போக நிலுவை வரி மற்றும் ஜிஎஸ்டியை தானாக இயந்திரம் கணக்கிடும். ஒரு பட்டனை அழுத்துவதின் மூலம் நிலுவை வரிகளின் சுருக்கத்தை காண்பிக்கும்.

விசா, மாஸ்டர் கார்டு, அல்லது நெட்ஸ் மூலம் கட்டணத்தை செலுத்தலாம்.

சோதனை மையத்திலிருந்து வெளியேறும் போது ஐஊயு அதிகாரிகளின் சோதனைக்காக ரசீதை பதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.

## சுங்க வரி செலுத்தும் சாவடியை பயன்படுத்துவதற்கான கையடக்க குறிப்புகள்

இலகுவான மற்றும் சிரமமற்ற விவரிப்பிற்காக, உங்கள் வரி விதிப்பிற்கான அல்லது வரி செலுத்தப்பட வேண்டிய பொருட்களின் சரக்குகள், பாஸ்போர்ட், ரசீதுகள் மற்றும் கடன் அட்டைகளை (விசா அல்லது மாஸ்டர் கார்டு) ஆயத்தமாக வைத்துக்கொள்ளவும்.

விவரிப்பிற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை நீங்கள் அளிக்க வேண்டும்:

- **சிகரெட்டுகள் :** எண்ணம் ரூ மதிப்பு
- **புகையிலை :** எடை ரூ மதிப்பு
- **வரிவிலக்கு சலுகை அளவிற்கு அதிகமான மதுவகைகள் :** கொள்ளளவு, ஆல்கஹால் தன்மை ரூ மதிப்பு
- **இறக்குமதி செய்யப்பட்ட புதிய பொருட்கள், நினைவு பொருட்கள், பரிசு பொருட்கள் ரூ உணவு வகைகள்:** மதிப்பு

## சுங்கத்துறை வரி செலுத்தும் சாவடி மூலம் வரி செலுத்துவது எளிதாக்கப்பட்டுவிட்டது

சுய விவரிப்பை மேற்கொள்ளும்போது, பணம் செலுத்தும் முறையை கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு படிப்படியாக பின்பற்றவும்:

| | |
|---|---|
| தொடுதிரையை தொடவும். |  |
| தவறான அல்லது முழுமையற்ற விவரித்தை அளிப்பது குற்றம் என்பதை கவனத்தில் கொள்ளவும். |  |

| | |
|---|---|
| பின்வரும் தொடுதிரை உத்தரவின்படி உங்கள் தனிநபர் விவரங்களை தெரியப்படுத்தவும். |  |
| தொடர்வதற்கு முன் உங்கள் தனிநபர் விவரங்களை உறுதி செய்துகொள்ளவும். |  |
| தொடுதிரை உத்தரவுகளை பின்பற்றி,<br>• சிகரெட்டுகள் மற்றும் புகையிலை பொருட்கள்<br>• உங்கள் வரி விலக்கு சலுகை அளவிற்கு மேல் உள்ள மதுபானம்<br>• இறக்குமதி செய்யப்பட்ட புதிய பொருட்கள், நினைவு பொருட்கள், பரிசு பொருட்கள் மற்றும் உணவு தயாரிப்புகள் ஆகியவற்றை தெரியப்படுத்தி, வரி செலுத்தவும். |  |
| தெரிவித்த விவரங்களை சரிபார்த்து, உறுதி செய்து பணம் செலத்த தொடரவும். |  |

மாஸ்டர் கார்டு , விசா அல்லது நெட்ஸ் மூலம் வரி செலுத்தலாம்.




பணம் செலுத்தலை நிறைவு செய்ய, உங்கள் பணம் செலுத்தல் முறைக்கு ஏற்ற தொடுதிரை உத்தரவை பின்பற்றவும்.







வெற்றிகரமாக பணம் செலுத்தியுடன், சாவடியிலிருந்து அதிகாரப்பூர்வ ரசீது உங்களுக்கு கொடுக்கபடும். சோதனை மையத்திலிருந்து வெளியேறும் போது ஐஊளயு அதிகாரியின் சோதனைக்காக ரசீதை பத்திரமாக வைத்துக்கொள்ளவும்.






SINGAPORE CUSTOMS
GST Registration No.: MG-8400000-6

Operation: Transaction

Date: 12/03/2009 Time: 18:59
Entry Checkpoint: Changi Airport Terminal 3
Unit Code: T3A Kiosk ID: K003
Receipt No.: 00051
Customer Ref: SY1 Age: 42
Period Away: N/A
Crew / Pass-Holder: N/A

| Item Description | Quantity | Value (S$) |
| --- | --- | --- |
| Cigarettes - Normal cigarettes | 20 stick(s) | 2.04 |

| | |
| --- | --- |
| Customs Duty (S$): | 0.00 |
| Excise Duty (S$): | 7.04 |
| GST (S$): | 0.64 |
| Total (S$): | 7.68 |
| Rounding Adjustments (S$): | 0.03- |
| Total Amt Payable (S$): | 7.65 |
| Total Amt Paid (S$): | 7.65 |

Payment Mode: NETS
Card ID: ****************5115
Merchant ID: 111801020000
Terminal ID: 80102002
Approval # Code: 185738
STAN: 000367

Please retain this receipt for Customs checks.
Thank you.

# கட்டுப்படுத்தப்பட்ட சரக்குகள்

கட்டுப்படுத்தப்பட்ட சரக்குகள் சிங்கப்பூருக்குள் கொண்டு வரப்படுவதற்கு முன் இறக்குமதி அனுமதி அல்லது சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு ஆணையத்தின் அங்கீகாரப் படிவம் தேவை. சரக்குகளின் இறக்குமதி அனுமதி அல்லது அங்கிகார ஆவணத்தை **ரெட் சேனலில்** சரிபார்ப்பிற்காக காண்பிக்கவும். கட்டடப்படுத்தப்பட்ட சரக்குகள் (இவையை மட்டுமே உள்ளடக்காது):

- விலங்குகள், பறவைகள், மீன்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புகள்
- சிடிக்கள், டிவிடிக்கள், திரைப்படங்கள் மற்றும் வீடியோ கேம்கள்
- ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள்
- மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்கள்
- தொலைத்தொடர்பு மற்றும் ரேடியோ தொடர்பு சாதனங்கள்
- கைவிலங்குகள் மற்றும் லத்திகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

# தடைசெய்யப்பட்ட பொருட்கள்

சிங்கப்பூருக்குள் கொண்டுவர அனுமதிக்கப்படாத பொருட்களின் (இவையை மட்டுமே உள்ளடக்காது) பட்டியல்:

- மெல்லப்படும் புகையிலை மற்றும் புகையிலை போன்ற பொருட்கள்
- சூயிங் கம்
- பிஸ்டல் அல்லது ரிவால்வர் வடிவிலான சிகரெட் லைட்டர்கள்
- கட்டுப்படுத்தப்பட்ட மருந்துப்பொருட்கள் மற்றும் மனநிலையை மாற்றும் பொருட்கள்
- அழியும் அபாயத்தில் உள்ள உயிர் வகைகள் மற்றும் அவை சார்ந்த தயாரிப்புகள்
- பட்டாசுகள்
- ஆபாச கட்டுரைகள், வெளியீடுகள், ஒளி நாடாக்கள்/ குறுந்தகடுகள் மற்றும் மென்பொருட்கள்
- பிரதியுரிமை பெற்ற வெளியீடுகள், ஒளி நாடாக்கள், வீடியோ தகடுகள், லேசர் தகடுகள், பதிவுகள் மற்றும் நாடாக்கள் ஆகியவற்றின் மறுபதிப்புகள்
- இராஜத்துதோரக மற்றும் தேசத்துரோக பதிப்புகள்

# பயணிகளுக்கான குறிப்பு

## மற்றவர்களுக்காக பொருளை எடுத்து செல்லாதீர்கள்

அந்த சரக்குகள் தடை செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட, அனுமதி மறுக்கப்பட்ட சரக்குகளாய் இருந்தால் நீங்களே அதற்கு பொறுப்புதாரர் ஆவீர்கள்.

## ரெட் மற்றும் கிரீன் சேனல் அமைப்பு

**சிகப்பு** மற்றும் **பச்சை சேனல்** அமைப்பு ஒரு சுயதேர்வு அமைப்பாகும். **பச்சை சேனலை** தேர்ந்தெடுப்பதின் மூலம், அதிகாரிகளிடம் தெரியப்படுத்த வேண்டிய பொருள் ஏதும் உங்களிடம் இல்லை என்று நீங்கள் அறிவிக்கிறீர்கள்.

## உண்மையான மற்றும் முழுமையான விவர அறிவிப்பு

தவறான விவரம் அளிப்பது சட்டப்படி குற்றமாகும். குற்றவாளிக்கு கூ10,000 வரை அபராதம் விதிக்கப்படும். ஆதலால், சந்தேகம் இருக்கும் பட்சத்தில் **சிகப்பு சேனலில்** கேட்டறியவும்.

## பயணப்பை பரிசோதித்தல்

சட்டப்படி உங்கள் பயணப்பையை நீங்கள் பரிசோதனைக்காக கொண்டு வருவது, திறப்பது மற்றும் பிரித்து காட்டுவது தேவைப்படுகிறது. பின்னர், நீங்கள் அவற்றை அடுக்கி கொள்ளலாம்.

## நான்கில் மூன்று பங்கு டாங்க் விதி

பெட்ரோல் மற்றும்/அல்லது சிஎன்ஜி எரிவாயு தொட்டிகள் கொண்ட சிங்கப்பூர் மோட்டார் வாகனங்கள், ஒவ்வொரு தொட்டிக்கும் கண்டிப்பாக குறைந்தது நான்கில் மூன்று பங்கு பெட்ரோல் மற்றும்/அல்லது சிஎன்ஜி-ஐ நிரப்பி இருக்க வேண்டும். இதை செய்ய தவறுவது குற்றச்செயலாகும். குற்றம் செய்யும்பட்சத்தில், நீங்கள் பயணத்தை தொடர விரும்பினால் உங்கள் வாகனத்தின் எரிபொருளை கூடுதலாக நிரப்பும் பொருட்டு திரும்பி செல்ல வேண்டும்.

வரிகளை சுங்கத்துறை வரி முனையில் கட்டவும்

Singapore Customs

# எச்சரிக்கை

சிகரெட்டுகள் உட்பட புகையிலை பொருட்களுக்கு வரி விலக்கு சலுகை கிடையாது. தெரியப்படுத்த தவறுவது குற்றச்செயல்.

$10,000 வரை அபராதம் அல்லது சிறை தண்டனை விதிக்கப்படும்.

போதைப்பொருள் கடத்துபவர்களுக்கு, சிங்கப்பூர் சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்படும்.

உதவி தேவையா? எங்களின் அறிவுரையை பெறவும். சந்தேகம் இருக்கும் பட்சத்தில் **சிகப்பு சேனலில்** கேட்டறியவும்.

இந்த துண்டுபிரசுரம் ஒரு வழிகாட்டியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சுங்கத் துறையின் அனைத்து செயல்முறைகள் மற்றும் தேவைகள் பற்றிய முழுமையான பட்டியல் இதில் அடங்கியில்லை. இந்த துண்டுபிரசுரத்தில் இருக்கும் தகவல்கள் அச்சிடப்பட்ட நேரத்தில் சரியானவை.


## சிங்கப்பூர் சுங்கத்துறை

அழைப்பு மைய தொடர்பு எண்: (+65) 6355 2000 பேக்ஸ்: 6250 8663
மின்னஞ்சல்: customs_feedback@customs.gov.sg
வலைத்தளம்: www.customs.gov.sg
முகவரி: 55 Newton Road, #10-01, Revenue House, Singapore 307987


டிசம்பர் 2011-ல் அச்சிடப்பட்டது.